"இனியொரு விதிசெய்வோம்"
# அரசு கல்லூரி ஆசிரியர் மன்றம் (தமிழ்நாடு)
# GOVERNMENT COLLEGE TEACHERS' MANRAM ( TAMILNADU)
( பதிவு எண் : 109 / 2000 - 83/2012)
எண்.229, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் தெரு, அமுதூர்மேடு, பட்டாபிராம், சென்னை - 600072.

| தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் | அமைப்புச் செயலாளர் |
| --- | --- | --- | --- |
| பேரா. இரா. குமார் | பேரா. ம. சிவராமன் | பேரா. கு. சந்திரசேகரன் | பேரா. மா. சேகர் |
| காரைக்குடி : 9952200556 | விழுப்புரம் : 9443535236 | இராமநாதபுரம் : 94860 34347 | கும்பகோணம் : 7010703549 |

| துணைத் தலைவர்கள் | | இணைச் செயலாளர்கள் | |
| --- | --- | --- | --- |
| பேரா. ம. ஆனந்தராஜ் | பேரா. கி. கரிகாலன் | பேரா. அ.சின்னதுரை | பேரா. அ. விஜயகாந்த் |
| கடலூர் : 9790500424 | சென்னை : 9444221897 | ஆத்தூர் : 9994438728 | வியாசர்பாடி : 9444885238 |

| தொடர் நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் : | பேரா. சா. சரவணன் | பேரா. செ. ஜெயந்தி | பேரா. சோ. மணிமுத்து |
| --- | --- | --- | --- |
| | கும்பகோணம் : 8300106423 | கரூர் : 9659862117 | இராமநாதபுரம் : 6382205426 |


மடல்: 57/**2023** நாள்:08.12.2023

பெறுநர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
தலைமைச் செயலகம்,சென்னை

**அன்புடையீர்,**

ஆசிரியர், மாணாக்கர் மற்றும் சமூக நலனில் அக்கறைகொண்டு கடந்த 24 வருடத்திற்கும் மேலாகச் செயலாற்றிவருகிற இயக்கமாக அரசு கல்லூரி ஆசிரியர் மன்றம் இருந்து வருகிறது. மிக்ஜம் புயலால் ஏற்பட்ட கன மழை காரணமாக சென்னை நகரம் மிகுதியான பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. இப்பாதிப்பால் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களை இழந்து வாடும் உறவினர்களுக்கும் மன்றம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. உண்ண உணவின்றி இருக்க இடமின்றி அவதியுறும் மக்களைப் பெரும் வெள்ளத்திலிருந்து காப்பாற்றும் பணியில் தமிழக அரசு திறம்படச் செயலாற்றி வருகிறது. அதனை மன்றம் உளமாரப் பாராட்டுகிறது. தமிழக அரசின் ஆக்கப்பூர்வமான இச்சமூகப் பணியில் அரசு கல்லூரி ஆசிரியர் மன்றமும் இணைந்து செயலாற்ற விரும்புகிறது. அவ்வகையில் 164 அரசு கல்லூரிகள் பலவற்றில் பேராசிரியர்களாக இருக்கும் மன்ற உறுப்பினர்கள் தங்களது டிசம்பர்(2023) மாத ஊதியத்தின் ஒருநாள் ஊதியத்தை மக்களின் துயர் நீக்க இசைவளித்துள்ளனர்.ஆகவே மேற்குறித்த மாதத்தின் ஊதியத்தில் ஒருநாள் ஊதியத்தைப் பிடித்தம் செய்துகொள்ளுமாறு மன்றம் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

தோழமையுடன்

இரா.குமார் ம.சிவராமன்

மாநிலத் தலைவர் பொதுச்செயலாளர்